BLK 362, # 12-1618
YISHUN RING ROAD
S'PORE 2776

5-10-93

கணேசனருள் முன்னிற்க. அன்பின் இளஞ்செழியனுக்கு எழுதிக் கொள்வது,

நலம். நாடலும் அதுவே. முதற்கண் எமது இதய வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகுக. திருமணம் நடைபெறுவது தெரிந்தும் விலாசம், டெலிபோன் நம்பர் தெரியா நிலையினில் உடன் வாழ்த்துக்களை அனுப்ப முடியவில்லை. உனது வாழ்க்கையின் உயர்ச்சி தனித்துவமானதும் பாராட்டுக்குரியதும் ஆகும். உனது இயற்கையான விவேகத்தினையும் விடாமுயற்சியினையும், நுண்மையான அறிவினையும் இச்சாதனைகளைச் செய்தமை உனது உறவினர்க்கும், உன் ஆசிரியர்க்கும், எமது சமூகத்திற்கும் பெருமை தரக்கூடியவை. உனது முழுமையான வளர்ச்சிக்கு அங்குதான் கூடுதலாக வாய்ப்பு உண்டு. அதற்கு உனது துணைவியின் ஊக்குவிப்பு என்றும் இருக்க எமது பிரார்த்தனை. இதற்கு உயர்ந்த எண்ணம் எளிமையான வாழ்க்கை முறை அவசியம். உயர்ச்சி அடைந்தவர்க்குத் தலைமைத்துவம் வந்து சேர்கின்றது. தலைமையிலுள்ளவர்கள் தம்மையும், தம்மைச் சேர்ந்தவர்களையும் ஒழுங்காக வழிநடாத்தியும், உதவி செய்தும் முன்னெடுத்துச் செல்வதுமாகும். இவ்வகையில் உனது செயற்பாடுகள் மெச்சக் கூடியவையாகும். இவை தொடர எமது பிரார்த்தனை.

உனது பின்னணியை ஒத்த பின்னணியில் இருந்து கல்வியால் உயர்ந்து பலரது எண்ணங்களில் இருந்து கொண்டு இருப்பவர்களில் எனக்குத் தெரிந்தவர் இருவர். அவர்களில் ஒருவர் கந்தப்பு உபாத்தியாயர், மற்றவர் பண்டிதர் மருதையனார். இவர்களது பெற்றோர் — வறுமையிற் செம்மையானவர். கஷ்டத்தின் மத்தியிலும் போட்டியின் மத்தியிலும் எதிர் நீச்சல் போட்டு முன்னணிக்கு வந்தவர்கள். எளிமையான நிலையில் இருந்தும் உயர்ந்த எண்ணமுடையவராயிருந்த

படையால் பல்லாயிரம் மக்களின் நிலையை மாற்றியமைத்த சைவப்பிரகாச வித்தியாலயத்தையும், மத்திய மகாவித்தியாலயத்தையும் வேலணையில் காலூன்ற வைத்தனர். இவர்களூடாக இவற்றை நம் முன்னோர் எங்களுக்களித்தனர்.

இன்று கல்லூரிகள் சோபையிழந்து அனாதைகளாக இருக்கின்றன. எமது கல்லூரியைத் தொய்ய விடாது சிறப்பான நிலையில் வைத்து எமது வருங்காலச் சந்ததிக்கு ஒப்படைக்க வேண்டும், என்ற எண்ணத்தினால் பழைய மாணவர் பெற்றோர், ஆசிரியர், வசதியான நலன் விரும்பிகள் முயன்று செயற்படுகின்றனர். இதன் முதற்படியாக கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்கள் உலகளாவிய ரீதியில் அமைக்கப் பெற்று வழிகாட்டலையும் நிதியையும் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. கொழும்பு, லண்டன், அவுஸ்திரேலியக் கிளைகளில் இருந்து பணம் கிடைக்கப் பெற்றன. இதன் காரணமாக கல்லூரிக்குத் தற்காலிகமாக கட்டடம் பிறவுண் றோட்டுக் கடுகாமையின் அரச்சடை றோட்டுடன் உள்ள காணியில் அமைக்கப் பெற்று இதற்கான தளபாடங்கள் பெறப்பட்டு கல்லூரி நடைபெறுகின்றது. தளபாடம் செய்த வகையால் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கடன் ரூ50,000/= கொடுக்க வேண்டியுள்ளது என்று அதிபர் சு. கலாதரன் அறிவித்துள்ளார். மேலும் பிள்ளைகள் வீடுகளில் இருந்து படிக்க முடியாத நிலையுள்ளது.

பள்ளிக்கூடங்களில், சர்வகலாசாலையில் இருந்துதான
இரவில் படிக்கிறார்கள். எமது கல்லூரிக்கு செஞ்சிலுவைச்
சங்கம் 2 பெற்றோமாக்ஸ் கொடுத்து படிப்பு நடைபெறுகின்
றது. பிள்ளைகளின் தொகைக்கு இவை போதுமானதாக வில்லை.
எனவே இவர்கள் கல்விக்குக் வசதியாய் 1KV வலுவுள்ள
மண்ணெயில் இயங்கும் ஜெனரேற்றர் ஒன்று வாங்கியனுப்பினால்
உதவியாயிருக்கும் என்றும் எழுதியுள்ளார். மேலும் கல்லூரியின்
சிறப்பான செயற்பாட்டுக்கு ஊக்குவிப்பும், வழிகாட்டலும்
நிதியும் தொடர்ச்சியாகத் தேவைப்படும். நான் அதிபராக
இருந்து 11/1/93ல் ஓய்வுபெற்று தற்பொழுது சிங்கப்பூரில்
இருக்கின்றேன். இங்கிருந்து மற்றவர்களுடன் தொடர்பு
கொள்வது சுலபம் என்ற எண்ணத்தில் போலும் எனக்கு
இவற்றை எழுதியுள்ளார்கள். நீங்கள் எமது வேண்டுகோளை
ஏற்றுத் திறம்படச் செயற்பட்டமைக்கு எமது வாழ்த்துக்களை
யும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் உங்கள் செயற்பாட்டுக்கு
சில யோசனைகளை அறிவிக்கலாம் என்று நினைக்கிறேன். ஒன்று
நிர்வாக சபையைக் கூட்டி கல்லூரியில் செய்ய வேண்டி
யன வற்றிற்கு உங்கள் வழிகாட்டலையும் நிதியையும்
அதிபருக்கு அனுப்பவும். அத்துடன் 1KV - மண்ணெய்
Generator வாங்கி - யாழ் அரசாங்க அதிபருடாக கல்லூரிக்கு
அனுப்ப நடவடிக்கை எடுக்கும்படி R. சுந்தரமூர்த்தி
(பழைய மாணவர் சங்க உபதலைவர், கொழும்புக்கிளை)
அவர்களைக் ~~[illegible]~~ கேட்டால் அவர் அதைச் செய்வார். அதற்கான
காசை பொ. பரராசசேகரம் (பொருளாளர்) அவர்களுக்கு
அனுப்பி வைக்கவும் அல்லது திரு சுந்தரமூர்த்திக்கும்
அனுப்பி வைக்கலாம். இது உடனடியாகச் செய்யப்பட
வேண்டும். கூடுதலானவர்கள் டிசெம்பரில் சோதனைக்
கிருப்பவர்கள். இந்நடவடிக்கை காலத்தே செய்த
பேருதவியாகும். என்னிடம் தற்சமயம் ஒருவரது

விசேடமும் இல்லை. இணைப்பாளர் பாஸ்கரனுக்கும் எமது வாழ்த்துக்களையும் மற்றைய எமது மாணவர்களுக்கும் எமது வாழ்த்துக்களையும் அறிவிக்கவும்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்
நன்றும் தீதும் பிறர் தர வாரா'

கடவுள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

இங்,

சே. பொ. சேதுராஜன்

Tel No: 7552252.

R. Suntharamoorthy Esq
21, Ridgeway Place
Colombo 6.
Tel No - 580122.

P. Pararajasekaram Esq
28, Janaki Lane
Bambalapitiya
Tel. No: 583911.